உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவம்.

மலர் 4. | பிங்களஸ்ரீ பங்குனிமீ - 1918ஸ்ரீ மார்ச்மீ | இதழ் 3.

பொன்வண்ணத் தந்தாதி.

பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணமேனி, பொலிந்திலங்கு
மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ்சடை, வெள்ளிக்குன்றந்
தன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மால்விடை, தன்னைக்கண்ட
என்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மாகிய வீசனுக்கே.

சிவஞான போதம்.

நான்காஞ் சூத்திரம்.

(28 ஆவது பக்கத்தொடர்ச்சி.)

இரண்டா மதிகரணம்.

ஆன்மா சகசமலத்துணராது (அமைச்சரசேய்ப்ப) அவை சந்தித்தது.

(இ-ள்.) ஆன்மா சகசமலத்தினல் உணர்வின்றி (நுண்ணுணர்வில்லாமையால் அரசன் இராச காரியங்களை யறிதற்கு மந்திரிமாருடன் கூடியிருத்தல்போல்) அவ்வந்தக்கரணங்களோடு கூடியது. (எ-று.)

இதனல் உயிர் அந்தக்கரணங்களோடு கூடியிருத்தற்குக் காரணம் சொல்லப்பட்டது.

மலங்கள் மூன்றனுள் ஆணவமலம் (செம்பினிடத்துக் களிம்பு உடனாய் நிற்றல்போல்) காரணமின்றி ஆன்மாவுடன் அனாதியாகவே உடனாய் (அத்துவிதமாய்) நிற்றலால் சகசமலம் என்னப்பட்டது. ஆணவமலத்தால் அறிவு தடைப்பட்டுநின்ற ஆன்மாவின்

அறிவை விளக்கும் பொருட்டு இறைவர் மாயாமலத்தையும் கன்ம மலத்தையும் கூட்டுதலால் இவ்விரண்டு மலங்களும் ஆகந்துகமலங்கள் என்னப்பட்டன. (ஆகந்துகம் = இடையில் கூடுவது.) ஆணவ மலத்திற்கும், மாயை கன்ம மலங்களுக்கும் இடையிலுள்ள இவ் வேற்றுமையை யுணர்த்தி, ஆணவமலத்தை வேறுபிரித்தற்கு ஆணவமலத்துணராது என்னாது சகசமலத்துணராது என்று விசேடிக்கப்பட்டது.

இவ்வதிகரணத்தால் பிரமாணவியலில் முதற்சூத்திரத்தில் உண்டெனச் சாதித்த ஆணவமலத்தின் இலக்கணமும் கூறியவாறும்.

சகசமலம் என்னப்படும் ஆணவமலத்தின் இலக்கணம்:— இது ஞானதிரோதகமாய் (அதாவது உயிரின் அறிவை மறைப்பதாய்), செம்புள்ளபோதே அதனோடு களிம்பாகிய குற்றமிருப்பது போல் வேறுகாரணமின்றி உயிருள்ளவன்றே அதனோடு உடனாய் நிற்கும் குற்றமாய், இருள் பலகண்களை மறைத்தும் தான் ஒன்றாயிருப்பதுபோல் எண்ணிறந்த உயிர்களோடுகூடி அவற்றின் அறிவு இச்சை செயல்களை மறைத்துக்கொண்டிருந்தும் தான் ஒன்றாயிருப்பதாய், உயிர்களை விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என மூத்திறப்படுத்துவதாய், உயிர்கள்தோறும் தனித்தனி வெவ்வேறாய் மறைந்து நின்று தத்தங்காலவெல்லையில் நீங்குவனவாகிய பலவேறு சத்திகளையுடையதாய், உயிர்கள் கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்றவத்தைகளை யடைதற்கு மூலகாரணமாய், நித்தமாய், வியாபகமாய், வியாபகமாகிய உயிர் அணுத்தன்மை யடையுமாறு செய்வதாயிருப்பதாம். வியாபகமாகிய உயிர் அணுத்தன்மைப்படுமாறு செய்தலின் ஆணவம் எனவும், உயிருக்குப் பசுத்துவத்தைச் செய்தலால் பசுத்துவம் எனவும், உயிரின் அறிவை மறைத்தலால் பசுநீகாரம் எனவும், உயிரைச் சீவிக்கவொட்டாது செய்தலால் மிருத்திபு எனவும், மயங்கிக் கிடக்கச் செய்தலால் மூர்ச்சை யெனவும், அசுத்தமாக்கலால் மலம், எனவும் இருள்போல் நிற்றலால் அஞ்சனம் எனவும், அறியாமையைச் செய்தலால் அவித்தை யெனவும், உயிரைமறைத்தலால் ஆவிருதி என்வும் பலபேர்களைப் பெற்றது.

இவ்வதிகரணத்தில், 1-வது—தன்னாற் கூறப்படும் பொருள்:- ஆன்மா அந்தக்கரணங்களைக் கொண்டு அறியும்.

2-வது—ஐயப்பாடு— ஆன்மா தானே அறியுமோ, அந்தக் கரணங்களைக் கொண்டு அறியுமோ.

3-வது—பிறர்கூறும் பக்கம்— ஆன்மா அந்தக்கரணங்களின் வேறாய அறிவுப்பொருளாயின் அதற்கு அவ்வந்தக்கரணங்களின் துணைவேண்டுவதில்லை. (இது அந்தக்கரணான்மவாதிகள் பக்ஷம்.)

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு—ஆன்மா அறிவுப்பொருளாயினும், தன்னோடு அநாதியே உடனாய் நிற்கும் ஆணவ மலத்தால் தானே யறியமாட்டாமல் அந்தக்கரணங்களைக் கொண்டு அறிவதாயிற்று.

5-வது—இயைபு—உதாரண வெண்பா.

மாயா தனுவிளக்கா மற்றுள்ளங் காணாதே
லாயாதா மொன்றை யதுவதுவாய்—வீயாத
வன்னிதனைத் தன்னுண் மறைத்தொன்றாங் காட்டம்போற்
றன்னைமல மன்றணைத ரான்.

(இ-ள்.) உள்ளம் = உயிரானது--மாயாதனுவிளக்கு ஆக் காணாதேல் ஒன்றை ஆயாது = மாயாகாரியமாகிய உடம்பைத் தனக்கு விளக்காக்கொண்டு காணாதாயின் ஒன்றையும் அறியாது.—மற்று மலம் தன்னை அன்று அணைதல் = சகசமலம் உயிரை அநாதியே பற்றிநிற்றல்—அது அது ஆய் வீயாத வன்னிதனை = அதுவதுவாய் நின்றும் தனக்குக் கேடில்லாத அக்கினியை—தன்னுள் மறைத்து ஒன்றாம் காட்டம்போல் = தனக்குள் மறைத்துவைத்து ஒன்றேயாய் நிற்கும் விறகைப்போலும் (எ-று.)

அக்கினி அதுவதுவாய் நிற்றலாவது விறகினுள் மறைந்து நின்றபோது அவ்விறகேயாயும், சூரியகாந்தத்தில் மறைந்துநின்ற போது அச்சூரிய காந்தமேயாயும், இவ்வாறே வேறு பொருள்களில் மறைந்தவிடத்து அவ்வப்பொருளேயாயும் தான் (அக்கினி) என்பது ஒன்றில்லை யென்னும்படி நிற்றல். அக்கினியானது விறகு முதலியவற்றில் அதுவதுவாய் நின்று கேடில்லாதிருப்பதுபோல், உயிரானது ஆணவமலத்தில் அதுவாய்நின்று (அதாவது ஆணவ மலமேயாய் இருந்து) கேடில்லாதிருக்கும்.

மாயையும் கன்மமும் ஆணவத்தைப்போல் அநாதியன்றெனக் காலத்தானும் வேற்றுமை யுணர்த்தவேண்டி "அன்றணைதல்" என்றார்.

இதனால் விளக்காய்நின்று விடயங்களையறியும் வண்ணம் உயிருக்கு அறிவை விளக்குதல் மாயையின் செயல் என்பதும், விடயங்களை அறியவொட்டாமல் அறிவைத் தடைசெய்து நிற்றல் ஆணவ மலத்தின் செயல் என்பதும் கூறப்பட்டது,

ஐக்கவாத சைவர் முதலியோர் இடையே வந்து கூடிய மாயா மலமே ஞானத்தை மறைக்கும், அதனின் வேருக ஆணவமல மொன்று உண்டென்பது மிகையென்பர். அவிச்சை அகங்காரம் அவா ஆசை கோபம் என்னும் பஞ்சகிலேசத்துள் ஒன்ருகிய அவிச்சையே ஆணவமலமாம் என்பர் சாங்கியர். உயிரின் குணமே ஆணவமலமென்பர் பாடாணவாதிகள். ஞானுபாவமே (ஞானமில்லாமையே) அது வென்பாரும், பிராந்திஞானமே (மயக்கஞானமே) அது என்பாரும், தமோகுணமே அதுவென்பாரும் உளர். இவ்வாணவமலத்திற்குப் பற்றுக்கோடாகிய ஆன்மாவையும் இவ்வாறே தத்தம் மதம்பற்றிச்சடமெனவைசேடிகரும், அறிவுமாத்திரையான குணமேயன்றிக் குணிப்பொருள் அன்றெனச் சாங்கியரும், சுதந்திர அறிவுடையதெனப் பாட்டாச்சாரியரும், எவ்வெவ்வுடம்பைப் பற்றிற்ரே அவ்வவ் வுடம்பளவாய் வியாபித்து நிற்கும் எனச்சமணரும், அணுவளவாயிருப்பதெனப் பாஞ்சராத்திரிகளும், உருவமெனப் பௌராணிகரும், அருவம் எனப் பாதஞ்சலரும், அருவுருவம் எனக்கவுளரும், இன்னும் பலர் பலதிறப்படவுங் கூறி மயங்குவர். அவர் கூறுவனவெல்லாம் பொருந்தாமை ஆகமங்களினும், சிவஞானசித்தியார் முதலிய நூல்களினுங் கண்டுதெளிக.

ஆன்மாவின் பாச சம்பந்தம்.

ஆன்மா பாசத்தோடு கூடிய நிலையிற் பசுவெனப்படும். பாசம்-ஆணவம், மாயை, கன்மம் என மூவகைப்படுமாதலின், அம் மூவகைப் பாசத்தோடுங் கூடிய ஆன்மாவே பசுவென்று சொல்லப்படும். பசுவென்பது ஆன்மாவுக்கு இயற்பெயரன்று. பாசத்தோடு கூடிய காரணத்தான் வந்த பெயராம்.

சிவஞானபோதம்.

“ நெல்லிற் குமியும் நிகழ்செம்பி னிற்களிம்புஞ்
சொல்லிற் புதிதன்று தொன்மையே—வல்லி
மலகன்ம மன்றுளவாம் வள்ளலாற் பொன்வா
ளலர்சோகஞ் செய்கமலத் தாம்.”

நெல்லின்கணுமியும் செம்பின்கட் களிம்பும் எக்காலத்துள வாயினவென்று ஆராயுங்கால், அந்நெல்லும் செம்பும் உளவாயின வன்றே உள்ளனவன்றி இடைவந்துளவென்பது கூறமுடியாது. அதுபோல ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களும் அநாதியேயுள்ளன. *

மோகம் மதம் முதலாயினவெல்லாம் மூலமலத்தின் காரியமாம். இன்பதுன்ப முதலாயினவெல்லாம் இருவினையின் காரியமாம். தநுகரண முதலாயினவெல்லாம் மாயையின் காரியமாம். ஆன்மாவென்னும் பெயர் வியாபகமான பொருளென்று பகரப்படும். படவே, ஆன்மா வியாபகப்பொருள் என்பதனை அறிந்துகொள்ளலாம். வியாபகமான இந்த ஆன்மா சேதனவஸ்து. சேதனமாவது அறிவுடைமை. சித்து - அறிவு. அதனையுடையது சேதனம். வியாபகமான ஆன்மாவின் அறிவு வியாபகமாகவே யிருக்கும். அறிவிருக்கும்பொழுது அறிவின் வியாபார பேதமாகிய இச்சையுந் தொழிலும் ஆன்மாவுக்கு இருக்குமென்பது வேறுகூறவேண்டா. அதனால் அறிவு, இச்சை, தொழில் என்னும் மூன்றும் ஆன்மாவின் மூன்று குணங்களாகக் கருதப்படும். இந்த மூன்று குணங்களும் ஞானசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி என கொள்ளப்படும் என்க. எனவே இவற்றை முறையே அறியுஞ் சத்தி, விரும்புஞ் சத்தி, தொழில்செய்யுஞ் சத்தி என்று பொருள்கோடலாம். இம்மூவகை ஆற்றலும் ஆன்மாவுக்கு இயல்பாயுள்ளன.

ஆன்மாவின் ஞானசத்தியைப் போலவே, கிரியா சத்தியும் வியாபகமாயிருக்கும். ஞானசத்தியைச் சர்வஞ்ஞத்துவமென்றும், கிரியாசத்தியைக் கர்த்திருத்துவம் என்றும் கூறுதலுமுண்டு. சர்வஞ்ஞத்துவ கர்த்திருத்துவங்களோடு கூடியது ஆன்மா. இந்த சர்வஞ்ஞத்துவ கர்த்திருத்துவ சத்திகள் முதல்வனுடைய சர்வஞ்ஞத்துவ கர்த்திருத்துவ சத்திகள்போல எவற்றாலுந் தடைப்படா வியல்பினையுடையவையல்ல. ஆணவமலத்தினாலே தடைப்படும் இயல்பினையுடையன.

முதல்வனுடைய ஞானசத்திக்கு சூரியப் பிரகாசத்தையும், ஆன்மாவின் ஞானசத்திக்குக் கண்ணொளியையும் ஒப்பிட்டுக் கூறலாம். கண்ணொளி இருளாகிய பாதார்த்தத்தினாலே காண்டல்

---

* மும்மலங்களும் அநாதியாகவே இருப்பினும் மாயை கன்மங்கள் இறைவரால் ஆணவமல நிவர்த்தியினிமித்தம் கூட்டப்பட்டனவாம். (ப-ர்.)

முதலிய வியாபாரமறும்படி தடுக்கப்படும். சூரியப் பிரகாசம் அதனால் தடைபடமாட்டாது. அவ்வாறே முதல்வனுடைய ஞான சத்தி ஆணவமலத்தினாலே தடைப்படமாட்டாது. ஆன்மாவின் ஞானசத்தி தடைப்படும்.

ஆன்மா அநாதிப்பொருள்; மலம் அநாதிப்பொருள்; இரண்டும் சமவியாபகமுள்ளன. ஆன்மா அறிவைக் குணமாகக்கொண்டிருத்தல்போல மலமும் அவ்வறிவைத் தடைசெய்யும் ஆற்றலைக் குணமாகக் கொண்டுள்ளது. இவ்விருபொருளும் அநாதியே தம்முட் சம்பந்தப்பட்டிருத்தலால் ஆன்மாவின் அறிவை மலம் தடைசெய்வதாயிற்று. ஆகவே மலம் தடைசெய்கின்றது என்னும் பொழுது மலசத்தி தடைசெய்கின்றதென்று பயன்கோடல் வேண்டும். அன்றியும், ஆன்மாவின் ஞானசத்தி மலசத்தியினாலே தடைப்படுகின்றது என விளங்கிக்கொள்ளுதலும் வேண்டும். இந்நிலையை நன்றாக ஆழ்ந்துபார்க்கும்போது, ஆன்மாவின் சொரூபம் ஞானமயமாதலால் அதன் சொரூபத்தில் இந்த மலசம்பந்தமில்லை. மலம் அதன் அறிவைத் தடுத்தலும் அதன் வியாபாரம் நிகழவொட்டாது தடுத்தலுமேயன்றி அக்குணத்துக்குக் கேடுசெய்தல் இல்லை. கண்ணொளி இருளினாலே தடைப்படும்பொழுது அவ்வொளிக்குக் கேடுண்டாவதில்லை. அவ்வொளியின் காண்டல் முதலிய வியாபார பேதங்கள் நிகழாதொழிகின்றன. அங்ஙனம் ஆன்ம அறிவின் அறிதல் முதலிய தொழில்களாகிய வியாபார பேதங்களே நிகழாதிருக்கின்றன. ஆணவமலத் தடையை இவ்வாறு வைத்து விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். மலசத்தி மலகுணமாய் மலவியாபக முழுதும் தானும் உள்ளதாய் மலத்தோடு சமவியாபக முற்றிருக்கும். ஆன்மாவின் வியாபக அறிவைத் தடைசெய்வதாய் அநாதியே சம்பந்தப்பட்டிருத்தலின் அநாதியே இந்நிகழ்ச்சியு முள்ளதாயிருக்கும்.

ஆன்மாவின் இயற்கையும், ஆன்மசிற்சத்தியின் இயற்கையும் சொரூபத்தில் அழுக்கின்றிச் சுத்தமாகவே யிருக்கும். இதனால் ஆன்மாவின் சொரூப இயல்பு இதுவென்பது உணரப்படும். சுபம்.

(இன்னுந் தொடரும்.)

இங்ஙனம்.

S. நடேசதேசிகன்,

கவர்ன்மெண்ட் ஸ்கூல், தமிழ்ப் பண்டிதன்,

திருமலைராஜன் பட்டணம்.

சிவபெருமான் யானைத்தோல் போர்த்தமை.

முன்னோர்கால் மிகக் கொடியனும் துஷ்டனுமாகிய கயாசுரன் என்பான் ஒருவன் தவத்தினாற் பிரமாவை மகிழ்வித்து, சமஸ்த வீரர்களையும் சங்கரிக்கும் சிவபெருமான் ஒருவரன்றி மற்றை எந்தத் தேவர்களாலும் தன்னைச் செயிக்கமாட்டாதிருக்க வல்ல மிகுந்த வலிமை, ஆயுள், சௌரியம், பராக்கிரமமுதலிய மற்றைய வரங்களையும் அப்பிரமாவிடத்துப் பெற்றான். பின்னர் அங்ஙனம் வரம் பெற்ற அசுரன் பிரமவிஷ்ணுமுதலிய தேவர்களை யுத்தத்திலே செயித்தும் மற்றைத் தேவர்களையும் அநேக முனிவர்களையும் கர்வங்கொண்டு கொன்றும், இங்ஙனம் சமஸ்தலோகங்களையும் வருத்தினான். உலகம் அனைத்தையும் பிடித்து வருங்கால் ஓர்நாள் அவன் இந்திரனைப்போரிலே செயித்து, ஐராவதத்தைத் துரத்தி, அதன் வாலைப் பிடித்துக் கறகற என்று இழுத்துச் சுற்றி, அதனால் மூர்ச்சையடைந்த யானையை அக்கொடியோன் வெகு தூரத்தில் எறிந்துவிட்டான். மேலும், மற்றத் திக்குப்பாலர்களையும் துன்புறுத்தி ஒட்டிவிட்டான். அக்கொடியோன் யக்ஷர்களையும், பூலோகத்து வசித்த மற்றவர்களையும், மற்றைச் சில பெரியமுனிவர்களையும் கொல்லுமாறு துரத்துங்கால், அந்தத் தபசிகள் அச்சமுற்றுக் காசிக்ஷேத்திரமோடி, அங்குள்ள இருஷிகளோடு சேர்ந்து மணிகர்ணிகாகட்டமடைந்து, விசுவநாதப்பெருமானுடைய மிகு சிரேட்டமாய அற்புதத்திருக்கோயிலுள்ளே போய் அங்கு சிவ கைங்கரியத்தில் முயன்ற அன்பர்களோடு அவ்விசுவநாதப்பெருமானை வழிபட்டுக்கொண்டு மிகுதியும் பயத்தினோடிருந்தார்கள். அக்காலையில் அக்கயாசுரன் வேகமாய் வந்து திருக்கோயில் வாயிலினின்று யாரும் பயங்கரமுறுமாறு அட்டகாசஞ் செய்தான். அதுகேட்ட தபசிரேட்டர்களெல்லாம் நடுநடுங்கி விசுவநாதப்பெருமானை ஆலிங்கனஞ் செய்து அறிவிழந்து மூர்ச்சையடைந்து போயினர். அந்த க்ஷணத்திலே அப்பாவியாகிய அசுரன் திருவாயிலைக் கடந்து அவர்களை யெல்லாம் கொல்லுமாறு விசுவநாத சுவாமிக்குச் சமீபத்திலே வர, எல்லோர் பாவங்களையும் நாசமுறச் செய்யும் அவ்விசுவநாதப்பெருமான் அநேககோடி சூரியப்பிரகாசமுடைய திருமேனிகொண் டாவிர்ப்பவித்து மிகுந்த தொனியோடு அக்கொடியோனை அதட்டினார். அத்தொனியைக்கேட்டு, அப்பாவியோ; சிவபிரான் (தமது) அடியார்களுக்கு வைரிகளாய் எய்தும்

வீரர்களையும் சங்காரஞ் செய்பவர் என அறிந்தானேனும் மதிமயக்கத்தினாலே விசுவநாதப்பெருமானோடு யுத்தஞ் செய்தான். அன்பர்க்கு அறக்கருணையும், அல்லாதார்க்கு மறக்கருணையுஞ் செய்யும் அச்சிவபிரான் அக்கொடியோனுடைய தலையின்மீது தமது பொற்றிருவடியினால் ஓர் உதை உதைத்தனர். உடனே அவ்வசுரன் அங்கே பூமியில் வீழ்ந்து சரீரமுழுதும் இரத்தம் தாரைதாரையாய்ப் பெருகப் பெற்றவனாய் மிகுந்த தொனியெழக் கதறினான். அவ்வேளையிலே சிவபிரான் அவனது முரட்டுத்தோலை உரித்து எடுத்துக்கொண்டனர். அவன் கதறிய சப்தத்தைக்கேட்டு, உமையம்மையார் தாமும் அச்சமடைந்தார். சிவபிரானுடைய கோடிசூரியப்பிரகாசம் பொருந்திய அற்புதத்திருமேனியைப் பார்க்கச் சகல தேவர்களுடைய கண்களும் மழுங்கிப்போயின. பின்னர் சிவபிரான் கொடிய அசுரனுடைய தோலினாலே தம்மைப் போர்த்துக்கொண்டார். தேவர்களெல்லோர் கண்களும் அவரைப் பார்க்கத் திறமையுடையனவாக, அவரெல்லாம் பயமிலராய் யானைத்தோல் போர்த்த சிவபிரானைத் தரிசித்து அன்பினோடு வழிபட்டார்கள். தபசிகளும் மூர்ச்சை தெளிந்தெழுந்து சிவபிரானையும் அவ்வசுரன் என்புகளையுமே கண்டு அடியார் துக்கம் தொலைத்துச் சுகமளித்த தேவாதிதேவராலே அவ்வசுரன்கொல்லப்பட்டான் என்று நிச்சயித்துப் பயமொழிந்து பிரமவிஷ்ணுக்கண்முதலிய சமஸ்த தேவர்களோடும் சிவபிரானைத் தோத்திரஞ்செய்து, விஜயீபவ, சம்போ மகாதேவ, என்றும் வணங்கினோர் துக்கந் தொலைப்பவரே, சகல ஜனங்களுக்கும் நாதரே, சச்சிதானந்தமூர்த்தியே, கயாசூரன்தோலை நீர் போர்த்துக்கொண்டமையை எந்த அறிஞர்கள் வர்ணிக்கின்றார்களோ, அவர்கள் எப்படிப்பட்டவர்களிடத்தும் பயப்படாதிருந்து எங்கும் பூசிக்கற்பாலராயும் எவராலும் வந்திக்கற்பாலராயும் இருத்தல் வேண்டும் என்று பிரார்த்திக்க, விஸ்வேசுரப்பெருமான் அங்ஙனமாகுக என்று வரமளித்து அந்தர்த்தானமாயினர். பிரமவிஷ்ணு முதலாயினோர் பரமானந்தமடைந்தார்கள். சிவபிரான் சகலதேவர்க்கும் முனிவர்க்கும் துன்புறுத்திய கொடியோனாகிய அசுரனைக் கொன்று எல்லோரையும் காப்பாற்றிய ஞாபகம் எவர்க்குமிருக்குமாறு அக்கயாசுரனுடைய முரட்டு (யானைத்) தோலைத் தரித்துக்கொண்டருளினர்.

சைவத் தனியரசு.

இயல்பென்றுந் திரியாம லியம மாதி
எண்குணமுங் காட்டியன்பா லின்ப மாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வார மாகிப்
பண்புறவுஞ் சௌபாந பக்ஷங் காட்டி
மயலறுமந் திரஞ்சிக்ஷை சோதி டாதி
மற்றங்க நால்வணங்க மௌந மோலி
அயர்வறச் சென்னியில்வைத்து ராஜாங்கத்தில்
அமர்ந்ததுவை திகசைவம் அழகி தந்தோ என்று

சஹஜஸநிஷ்டாநுபூதிச் செல்வராகிய ஸ்ரீ தாயுமானசுவாமிகள் பிரகாசப்படுத்தியுள்ளார். இப்பாசுரத்தில் முக்கியமாய் கவனிக்கவேண்டிய அரியபெரிய விஷயமாவது "மௌநமோலி அயர்வறச்சென்னியில்வைத்து ராஜாங்கத்தில் அமர்ந்தது வைதிக சைவம்" என்னும் பகுதியேயாம். இவ்வைதிக சைவம் மற்றெல்லாச் சமயங்களினும் மேற்பட்டுத் தனியரசு பெற்றுடையதென்பது பெறப்படுகின்றது. படவே, அதனினும் மிக்கது வேறில்லை யென்பது யாவராலும் மறுக்கமுடியாத விஷயமாம். இவ்வுண்மையினை நம் வைதிக சைவர்கள் களிக்குமாறு காட்டுதும்.

உலகத்திலுள்ள சமயங்கள் பலவற்றுள்ளும் மிகச் சிறந்து விளங்கும் நெறி "வைதிக சைவம்" ஒன்றேயாம். இதில் கடவுள், ஆன்மா, மலம், கன்மம், மாயை என்னும் பொருள்களின் தன்மை உள்ள உள்ளபடி உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கியிருக்கின்றது. எந்தச்சமயத்தின் கொள்கையும் வைதிக சைவத்தின் ஓர் பகுதியிலே அடங்கும். வைதிக சைவத்தின் கொள்கையோ அவ்வாறு அடங்குவதன்று. வைதிக சைவத்தில் அடங்காத ஒருண்மையை வேறொரு சமயம் அரிதாகக் கண்டு கூறிற்று என்பதை நாம் ஒருகாலத்தும் அறிந்தோமில்லை. மற்றச்சமயங்களிலே காணப்படாத பல அரிய உண்மைகள் வைதிக சைவத்திலே காணப்படுதலை நாம் பன்முறைகளில் அறிந்து மிருக்கின்றோம்; கேட்டு மிருக்கின்றோம். அது எவ்வாறெனில், இவ்வுலகத்திலுள்ள சமயங்களிற் சில பௌதிகமான பிரபஞ்சத்தை மாத்திரம் ஏற்றுக்கொண்டு மற்றுள்ள பொருள்களை மறுக்கின்றன. வேறு சில பௌதிக பிரபஞ்சத்தையும் அதன் காரணமான பூதங்களையும் ஏற்றுக்கொண்டு, மற்றுள்ள பொருள்களை மறுக்கின்றன. இன்னுஞ் சில பூதபௌதிகங்களோடு ஆத்மாவையும் கன்மத்தையும்

ஏற்றுக்கொண்டு மற்றவற்றை மறுக்கின்றன. மற்றும் சில அவற்றோடு பூதகாரணமான சில தத்துவங்களை அங்கீகரித்துக்கொண்டு, மற்றவற்றை மறுக்கின்றன. வேறு சில அவற்றோடு மூலப்பிரகிருதியையும் பிரபஞ்ச காரண கர்த்தாக்களையும், ஏற்றுக்கொண்டு மற்றவற்றை மறுக்கின்றன. வேறு சில அவற்றோடு மாயையையும் அதன் காரணகர்த்தாக்களையும் ஏற்றுக்கொண்டு, ஏனையவற்றை மறுக்கின்றன. இன்னுஞ் சில அவற்றோடு ஆணவமலத்தையும் சுத்த தத்துவங்களின் ஒவ்வொன்றையும் அவற்றின் காரணகர்த்தாக்களான சிவபேதங்கள் ஒவ்வொன்றையும் ஏற்றுக்கொண்டு, ஏனையவற்றை மறுக்கின்றன. வேறு சில அவற்றோடு முதல்வனுடைய தடஸ்தநிலையே நிலையாகக்கொண்டு அமைகின்றன. இச்சமயங்களெல்லாம் இவ்வாறிருக்க வைதிக சைவமோ, இச்சமயபேதங்கள் கூறும் பொருள் இயல்புகள் எல்லாவற்றையும் தன்னகத் தடக்கி இப்பௌதிக பிரபஞ்ச இயல்பினையும், இதன் காரண பூதங்கள், தத்துவங்கள், மூவகைப் பிரகிருதிகள் ஆகிய இவற்றின் தன்மைகளையும், கன்மமலம் ஆணவமலம் ஆகிய இவற்றின் நிலை வேறுபாடுகளையும், ஆன்மா சிவம் என்னும் பொருள்களின் சொரூப தடஸ்த நிலைகளையும் உள்ளஉள்ளபடி விளக்கி அச்சமயபேதங்கள் யாவற்றினும் முதன்மை பெற்று அவைகள் வணங்க மௌநநிலையாகிய கிரீடத்தைச் சென்னியில் வகித்து "முடிந்தமுடிபு" என்னும் பொருளைத் தரும் "சித்தாந்தம்" என்னுஞ் சிறப்புப் பெயர் பெற்றுத் தனியரசு செலுத்தி நிற்கின்றது. சுருதிகளும் "இந்தவேதாந்தப் பொருளாகிய ஞானம் பரமசுபமாகிய சித்தாந்தம்" என்று பொருள்பட "வேதாந்தார்த்தமிதம் ஜ்ஞானம் ஸித்தாந்தம் பரமம் சுபம்" என்றும், "ஸித்தாந்தம் வேதசாரத்வாத்-சித்தாந்தம் வேதசாரமாயிருத்தலின்" என்றும் விளக்கியுள்ளன. இதனால் உலகிலுள்ள சமயங்கள் பலவற்றினும் ஒப்புயர்வற்று விளங்குநெறி இவ் வைதிக சைவம் என்பதற்கு யாதொருதடையுமில்லை. இதுவே எல்லாவற்றிற்கும் தாயகமாம். இந்நெறிக்கு முதலாசிரியர் பிறந்திறவாப் பெருவாழ்வுடைய பசுபதி என்னுஞ் சிவபெருமான். ஏனைய சமயங்களுக்கோ ஆசிரியர்கள் மலசகிதராய்ப் பிறந்திறந்துழலும் உயிர்களாவர். ஆதலினன்றோ "சைவமாஞ் சமயஞ் சாரும் ஊழ்பெறலரிது" என்றது திராவிட உபநிடதம்.

இனி இச் சைவத்தனியரசு செலுத்துதற்கு இராஜதானியாகவுள்ள இடம் புண்ணியபூமியாகிய இந்தியா என்னும் பரதகண்டமே,

நெடிய கடல் சூழ்ந்த இந்நிலவுலகத்தில் பரதகண்டத்தைப் புண்ணிய பூமியென்று கூறுதற்குக் காரணம் யாதெனில் இதில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் விசேடங்கள் இருத்தல்பற்றியேயாம். இம் மூர்த்தி தல தீர்த்த விசேடங்கள் வேதாகமங்களிலும், புராணேதிகாசங்களிலும், மற்றுமுள்ள சாஸ்திரங்களிலும் அதிகமாய் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அரிபிரமேந்திராதி அமரர்களும், முனிவர், மனிதர், நாகர் முதலிய யாவரும் இம்மை மறுமைப் பயன்களை அடைதற்கு இவற்றையே சாதனமாகக்கொண்டிருக்கின்றனர். இவைகள் இங்கில்லையாயின், இப்பரதகண்டம் புண்ணிய பூமியாதற்கு ஒரேதுவுமில்லை. இதுபற்றியே இப்பரதகண்டத்தைத் தன்னகத்தடக்கியுள்ள இந்தப்பூமி மற்றைய சுவர்க்காதி லோகங்களினும் மிகவும் விசேடமுடையதாயிற்று. இங்கு "வானிடத்தவரும் மண்மேல் வந்தரன்றனை யர்ச்சிப்பர்," "புவனியிற்போய்ப் பிறவாமையின் நாள் நாம் - போக்குகின்றோம் அவமே யிந்தப்பூமி - சிவனுய்யக் கொள்கின்றவாறென்று நோக்கித்-திருப்பெருந்துறையுறைவாய்" என்னுந் திருவாக்குகள் கவனிக்கற்பாலன. சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமதேவனும், திதிகர்த்தாவாகிய விஷ்ணுமூர்த்தியும், அவரது அவதாரங்களும், சம்ஹாரகர்த்தாவாகிய உருத்திரமூர்த்தியும், இந்திரனும், பிறதேவர்களும், வசிஷ்டர் அகஸ்தியர் முதலிய முனிவர்களும், திருநந்திதேவர் முதலிய சிவகணத்தலைவர்களும், விநாயகர் சுப்பிரமணியர் முதலிய சிவகுமாரர்களும் இம்மூர்த்தி தல தீர்த்தவிசேடங் காரணமாக இவ்வுலகைநாடி நிற்பரென்றால் இதனினும் வேறு மகிமை யாதுளது. இம் மூர்த்தி தல தீர்த்தங்களின் விசேடங்கள் வேதங்களிலே சிறுபான்மையும், ஆகமங்களில் சரியா கிரியா பாதங்களிலே பெரும்பான்மையும் ஓதப்பட்டுள்ளன. இவ்வேதாகம விதிப்படி அமைந்துள்ள இவற்றைக்கொண்டு சிவவழிபாடு செய்தோர் அடைந்த பேறுகள் புராணங்களிலும் இதிகாசங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதலால் சமஸ்த நூல்களிலும் மோட்சத்துக்குச் சாதனமாயுள்ள கன்மப் பகுதிகளுக்கும், ஞானமார்க்கங்களுக்கும் தாரகமாயுள்ள சமயம் "வைதிக சைவமே" என்று குன்றின்மேலிட்ட விளக்குபோல் காட்டப்பட்டது. ஸ்ரீ தாயுமானசுவாமிகளும்:—

அந்தோவீ ததிசயமிச் சமயம் போலின்
றறிஞரெல்லா நடுவெறிய அணி மாவாதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கும் மற்று மற்றும்

இந்த்ராதி போகநலம் பெற்றபேர்க்கும்
இதுவன்றித் தாயகம்வே றில்லை இல்லை
சந்தான கற்பகம்போல் அருளைக் காட்ட
தக்கநெறி இந்நெறியே தான்சன் மார்க்கம் என்று

விளக்கியுள்ளார். இதனால் எந்தமூர்த்தியும், எந்தத்தலமும், எந்தத் தீர்த்தமும் வைதிக சைவ முத்தி சாதனங்களாகவே இருக்கின்றன. வைதிக சைவமில்லையாயின் மூர்த்திகளில்லை; தலங்களில்லை; தீர்த்தங்களில்லை; ஞானங்களில்லை; வேறெதுவுமில்லை. நடராஜமூர்த்தி, விசுவேசமூர்த்தி, ஆத்மநாதமூர்த்தி, தியாகராஜமூர்த்தி, சோமாஸ்கந்தமூர்த்தி, சொக்கலிங்கமூர்த்திமுதலிய மூர்த்திகளின் விசேடமகிமைகளையும், சிதம்பரம், காசி, திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி, மதுரை, காஞ்சி முதலிய தலங்களின் விசேடமகிமைகளையும், கங்கை, யமுனை, கோதாவிரி, காவிரி, தாமிரபரணி, சேது முதலிய தீர்த்தங்களின் விசேட மகிமைகளையும் எவர் மறுக்கற்பாலர். எங்குள்ள மூர்த்திகளும், எங்குள்ள தலங்களும், எங்குள்ள தீர்த்தங்களும் சைவத்தனியரசுடையன என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளத்தக்க முடிபாம். பரதகண்ட முழுவதுமுள்ள எல்லாவிசேடங்களும் வைதிக சைவத் தனியரசின் கீழ் உள்ளனவாமன்றி வேறெந்தச் சமய நெறியிலும் அமைவதில்லை. வைதிகர், ஸ்மார்த்தர், ஏகான்மவாதிகள் முதலிய எல்லாச் சமயிகளும் இச் சைவத் தனியரசின் கீழடங்கி அங்கங்குள்ள தலங்களில் வசித்தும், அத்தலங்களை மகிமைப்படுத்தும் ஆலய சேவைசெய்தும், அவ்வாலயங்களுக்கு உயிர்நிலையாய் விளங்கும் மூர்த்திகளை வழிபட்டும், அவற்றிற்குத் துணைசெய்துநிற்கும் தீர்த்தங்களாடியும் திருவருட்பேற்றை விரும்பிவாழ்வரென்றால் வைதிக சைவம் தனியரசுடையதென்பதில் யாது சந்தேகமுளது.

சிவத்விஜர்களாகிய ஆதிசைவ பிராம்மணர்கள் மூர்த்திகளை ஆராதித்துத் திருவருளை வழங்க, எந்த வைதிகர், எந்தஸ்மார்த்தர், எந்த ஏகான்மவாதி வெளிமண்டபங்களில் பயபக்தி விநயத்தோடு நின்று வழிபட்டுத் துதித்து மனங்கசிந்துருகி, கண்ணீர்சொரிந்து விபூதிப்பிரசாதத்தை இருகரத்தாலும் ஏற்றுச் செல்லாதவர்? இவர்களுள்ளே தலவாசம், தலயாத்திரை, தீர்த்தஸ்நானஞ்செய்யாதவர் எவர்? இதனால் எந்த சமயிகளும் தன்னிடத்துவந்து வணங்கி இரப்பத்தானே அருள்வழங்கித் தனியரசுசெய்துநிற்பது நம் வைதிக சைவமன்றோ? குன்ற மெறிந்த குமரவேள் திருவவதாரமாகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும், வாகீசமுனியின் திருவவ

தாரமாகிய திருநாவுக்கரசுமூர்த்தி சுவாமிகளும், அரனது விம்ப மாய் ஆடிக்கண்ணெழுந்த ஆலாலசுந்தரர் திருவவதாரமாகிய சுந்தர மூர்த்தி சுவாமிகளும், குடமுழா நந்தியின் திருவவதாரமாகிய மாணிக்கவாசக சுவாமிகளும், அருள் ஞானதான வள்ளல்களாகிய மெய்கண்ட சிவாசாரியர் முதலிய சந்தானகுரவர்கள் நால்வரும் ஏனைய உண்மை நாயன்மார்கள் முதலியோரும் உண்மைச் சமய மென ஸ்தாபித்து உலகர் யாவர்க்கும் திருவருள் வழங்கியது இச் சைவத்தனியரசி லன்றோ? சங்கராசாரியர் முதலிய மதாசாரியர்க ளும் இம்மூர்த்தி தலதீர்த்த சேவைசெய்து உச்சீவித்ததும் அவர் வழிவந்தோர் இன்னுஞ்செய்து உச்சீவிப்பதும் யாரும் அறிந்த விஷயமன்றோ.

இனி இச்சைவத் தனியரசுக்குச் செங்கோலாவது சிவஞான போதம். இது எல்லாமுணர்ந்த முதல்வன் திருவாக்காகும். பதி பசு பாசம் என்னும் திரிபதார்த்தங்களினுடைய பொதுவியல்பை யும் சிறப்பியல்பையும் தேறாது மயங்குவோர்க்கு, அம்மயக்கம் நீங்கி அவ்விருவியல்பையும் ஒருங்குணர்த்த எழுந்தது இச்சிவஞான போதமே. வேதசிவாகமப் பொருளனைத்தையும் முடித்துக்காட் டிச் சித்தாந்தமாய் விளங்கலின் இது சித்தாந்த மஹா சூத்திரம் எனவுஞ் சொல்லப்படும். இதற்கு இணையாயதொரு சூத்திரம் வேறுகிடையாது. என்னை? வேதாந்த சூத்திரம் சூத்திரவடிவாய் விளங்குதலின், வேதாந்த சூத்திரமோ சித்தாந்த சூத்திரமோ மிகச் சிறந்தது என ஒரு விசாரம் நிகழும். அவ்வாறு விசாரித்தல் அறியாமையாம். ஏனெனில் சித்தாந்த மஹாசூத்திரம் முதல்வன் திருவாக்கு. வேதாந்த சூத்திரம் வியாசமுனிவர் வாக்கு. முதல்வன் திருவாக்கையும் முனிவர் வாக்கையும் சமப்படுத்தி விசாரித்தல் குற்றமன்றோ. முனிவருள்ளே முக்குணவசத்தால் முறைபிறழ்ந் துரைக்கும் நீர்மை காணப்படும். "ஐயிருபுராணநூல் அமலற் கோதியும், செய்ய பன்மறைகளுந் தெரிந்து மாயையால், மெய் யறுகுள்புகல் வியாதன்" என்பதால் வியாசமுனிவரிடத்தும் அந் நீர்மையுண்டென்பது காணப்பட்டது. வேதவியாசர் அந்நூலினைச் செய்யும்போதே பொருள்பலபடத் தோன்றும்படிச் செய்தார். அதுபற்றியே நீலகண்ட சிவாசாரியரும், சங்கராசாரியரும், இராமா னுஜாசாரியரும், மத்துவாசாரியரும், பிறரும் தம்தம் மதக்கொள் கைகளுக்குத் தக்கவாறு முரணிப் பலவகைப்படப் பொருள்கூறி பாஷியங்கள் செய்தனர். நூல்செய்யுங்காலத்தே வேதவியாசர் கொண்ட கருத்தும் உலக அநுபவமும் ஒத்து எவரையும் மயக்கும்,

நீர்மையதாய் முடிந்தமையின் வேதாந்த சூத்திரமும் சித்தாந்த மஹா சூத்திரமும் தம்முட் பெரிதும் வேற்றுமையுடையனவாகும்.

அன்றியும் சித்தாந்த மஹாசூத்திரங் கேட்டோர் பதிவர்க்கத் துட்பட்ட பிரணவர் முதலாயினோர். வேதாந்த சூத்திரங்கேட்டோர் பசுவர்க்கத்துட்பட்ட முனிவர்கள். சித்தாந்த மஹாசூத்திரம் சாதாக்கிய தத்துவவாசிகளாகிய பிரணவர் முதலாயினோர்க்கு உபதேசிக்கப்பட்டுச் சாதாக்கிய தத்துவத்தினும், அனந்த தேவர்க்கு உபதேசிக்கப்பட்டு ஈசுவர தத்துவ முதலியவற்றினும், அவரால் ஸ்ரீ கண்டருத்திரருக்கு உபதேசிக்கப்பட்டு ஸ்ரீ கண்ட புவனத்தினும், அவரால் திருநந்திதேவர்க்கு உபதேசிக்கப்பட்டு, அவரால் கணங்கள் தேவர்கள் முனிவர்களுக்கும், முனிவரால் மனிதர்களுக்கும் உபதேசமாகிப் பிரகிருதியாதி சம்பந்தமான எல்லா உலகங்களினும் அதாவது சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதிமாயைஎன்னும் மூன்றினுந்தோன்றிய எல்லா உலகங்களினும்பரவிவிளங்கியுள்ளது. இன்னும் மூவகைப்பட்ட உலகங்களினும் ஞானதேசிகமூர்த்தியாய் விளங்கும் ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி திருக்கரமொன்றில் உண்மை ஞானோபதேசநூலாய் விளங்கியிருக்கின்றது. சனகாதி முனிவர்களுடைய மயக்கங்களை யறுத்து மெய்ஞ்ஞானமருளியது. சிருஷ்டி ஆரம்ப முதற்கொண்டு நிலவியுள்ளது. எவரானும் பொருள் பேதிக்கமுடியாது உண்மைப்பொருள் ஒன்றே பயப்பது. குருந்த மரநிழலிலே திருவாதவூரர் என்னும் மணிவாசகப்பெருமானுக்கு ஞானம் போதிக்க ஏதுவாய் நின்றது. வேதாந்த சூத்திரமோ முனிவர்வாக்காய் முனிவர்க்கும் மனிதர்க்கும் இவ்வுலகில்மட்டும் உபதேசிக்கப்பட்டு விளங்குவது. இக்கலியின் முந்திய துவாபர யுகத்திற் பிறந்தது. இதுவுமன்றி இன்னம் பல வேறுபாடுகள் உள்ளன. இச் சிவஞானபோதம் என்றும் சிவஞானபோத மாயே பிரகாசித்தலால் இயல்பென்றுந் திரியாத வைதிக சைவத் தனியரசுக்கு அருமைச் செங்கோலாய் விளங்கியுள்ளது.

இனி இவ்வரிய பெரிய செங்கோலின் ஆணையாவது கைகாட்டாகிய சின்முத்திரையாம். இது மேற்சொன்ன ஞானதேசிக மூர்த்தியின் மற்றொரு கரத்தில் அமைந்திருப்பது. "மும்மலம் வேறுபட்டொழிய மொய்த்துயிர் - அம்மலர்த்தாணிழல் அடங்குமுண்மையைக் - கைம்மலர் காட்சியிற் கதுவ நல்கிய" என்னுங் குறிப்பே சின்முத்திரையாம். சின்முத்திரையாவது ஞானக்குறியாம். ஞானதேசிகமூர்த்தியானவர் தமது திருவுள்ளத்துக்கொண்ட உபதேசப்பொருளை குறிப்பினாலுணர்த்துகின்ற அமைவே

அக்கைமமலா காட்சியாம். கைம்மலரினுள்ள ஐந்து விரல்களும் சிவம், ஆன்மா, ஆணவம், கன்மம், மாயை என்னும் ஐந்துபொருள் களை யுணர்த்துவன. சிவாகமங்கள் இருபத்தெட்டும் சிவஞான போதமும் சிவமுதலிய ஐந்து பதார்த்தங்களினியல்பைப் போதிப் பனவென்பது அந்த ஐந்து விரல்களின் குறிப்பாம். அவற்றுள் நடுவிரல், அணிவிரல், சிறுவிரலாகிய மூன்றனையும் சுட்டுவிரலைவிட்டு வேறுபிரித்துக் காட்டுவது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலம் வேறுபட்டொழிதலைக் குறிப்பது. அச்சுட்டுவிரல் பெரு விரலடியில் சார்ந்திருக்கும் கோலம் மும்மலத்தினீங்கிய உயிர் மொய்த்து அம்மலர்த்தாணிழல் அடங்கும் உண்மையைக் குறிப்ப தாம். அதாவது ஆணவமலனீங்கிய உயிர் சிவத்தினது திருவடி நிழலை அடையுமியல்பைக் குறிப்பது. இங்கு திருவடி யென்பது உபசாரச்சொல்லாய் அருளையுணர்த்தாகிற்கும். அருளாவது சிவத் தின் அபின்ன சக்தியாம். சிவத்தினது குணமாகிய சர்வஞ்ஞத்துவ முதலிய ஆறும் சிவசக்தி யெனப்படுமாதலால் அச்சிவஷாட்குண் ணியங்களை ஆன்மாபெற்றுச் சிவமாயிருப்பதே மேலான பரமுத்தி யாம். இதுவே சைவத்தனியரசு செலுத்தும் ஆணையாகும்.

இதுகாறுங் கூறியவற்றால் வைதிக சைவ நெறியொன்றே எச் சமயத்தினும் தனியரசுடையதென்பதும், அதன் செங்கோல் சிவ ஞானபோதம் என்பதும் அக்கோலின் ஆணை சின்முத்திரை என்ப தும் யாவரும் நன்குணர விளக்கிக்காட்டப்பட்டது. சுபம்.

மெய்கண்டதேசிகன் திருவடி வாழ்க.

சோளங்கிபுரம் சிவஅருணகிரிமுதலியார்.

பரமதபங்க வினாவிடை.

இஃது ஸ்ரீலஸ்ரீ குளை, சோமசுந்தரநாயகரவர்களால் இயற்றப்பட்டது.

ஒரு சைவாசாரியர் ஒரு பொதுஸ்தானத்தில் ஒரு மாணக்க ருக்குச் சைவசித்தாந்த உண்மையைப் போதித்துக்கொண்டிருந் தார். அப்போது உலகாயதன் முதலிய பல சமயிகளும், சில லௌகிகர்களும் அங்குவந்து சேர்ந்தார்கள். அவர்கள் வரவைக் குறைகூறாமல் ஆசிரியர் தமது சித்தாந்தத்தைப் போதித்துக் கொண்டிருக்கையில், அங்கு வந்தவர்கள் பொறாமல் வெகுண்டு

தத்தமக்கிசைந்தவாறு வினவினர்கள். அவர் வினவைகட்கெல்லாம் ஆசிரியர் தக்க விடையளித்து வாயடங்கச்செய்து தமது மாணுக்கரை யுவப்பித்துச் சைவசித்தாந்த வுண்மையைத் தாபித்தருளினர். அதனை யீண்டுவரைகின்ருேம்.

கல்வியின் பயன்.

ஆசிரியன். அப்பா குழந்தாய், நீ சிறுபிள்ளை. உனக்கு ஆவசியகமானது கல்வியொன்றே. ஆகையால், நீ கல்வியில் முயற்சியாயிரு.

மாணுக்கன். எனது குருமூர்த்தியே, கல்வி கற்பதனுல் வரும் பயன் யாது? அதனை உரைத்தருளல் வேண்டும்.

ஆ. "அறம்பொரு ளின்பம் வீடும் பயக்கும் - மறங்கொன்றறிவகற்றுங்கல்வி" என்று மேலோர் கூறினுராகையால், கல்வியானது சதுர்வித புருஷார்த்தங்களையும் பயந்து, அஞ்ஞானத்தை விலக்கி, மெய்ஞ்ஞானத்தை விளக்கி உபகரிக்கு மாற்றலுடையதென் றறியக்கடவாய்.

மா. புருஷார்த்தங்களாகிய அறம் பொரு ளின்பம் வீடிவைகளினுண்மையை இனிது விளக்கியருளல் வேண்டும்.

ஆ. "அறம்பொரு ளின்பம்வீ டடைதனூற் பயனே" என்ருர் பெரியோராகலின், அவற்றினுண்மையை நீ வினவியது எமக்குப் பரமசந்தோஷம். ஆகையால், அதனைச் சொல்லுகிருேங் கேட்டுணர்தி.

மா. எனது தவப்பயனுக வெழுந்தருளிய தலைவரே, சொல்லியருளும்.

ஆ. "ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங் - காதலிருவர் கருத்தொருமித் - தாதரவு-பட்டதே யின்பம் பரனை நினைந் திம்மூன்றும் - விட்டதே பேரின்ப வீடு" என்னுந் திருவெண்பாவை யோசித்தவர்க்குப் புருஷார்த்தத்தின்பயன் இனிது விளங்கும்.

மா. தேவரீரது பாதவூழியஞ்செய்யும் அடியேனுக்கு இதில் ஒரு சந்தேகம் நிகழ்கின்றது. சொல்லும்படி உத்தரவானுல் சொல்லுகிறேன்.

ஆ. ஒருதடையுமில்லை. சம்பிரமமாய்க் கேட்கலாம்.

மா. புருஷார்த்தம் நான்கு என்று முதற்கட்கூறி, முடிவாக வீடு ஒன்றினையே நிலைபெறுவித்தது யாங்ஙனம்?

ஆ. வீடு என்னுஞ்சொல்லே யாவும் விடுபட்ட இடம் என்று பொருள் பயக்கின்றது. இதுவே புருஷார்த்தத்தின் முடிந்த இடமாயுள்ளது. கீழுப்பரிகைகளைக் கடந்து மேலுப்பரிகையிற் சென்று சுகிக்குமொருவன், தான் கடந்தேறியவுப்பரிகைகளைக் கீழாக வொதுக்குவது குற்றமாமோ?. ஒன்றினைக்கடந்து மற்றொன்றிலேறுங்கால் ஒன்றுக்கொன்று சாதகமாயிடுதல் நிச்சயம். இப்படியே அறம் பொருளின்பம் வீடிவைகளையுங் கண்டு தெளிவாயாக.

மா. அறத்தினைச் செய்யத்தொடங்காதார்க்கு அறம் புருஷார்த்தமும், அவ்வறத்தினைச் செய்யப்புகுந்தார்க்குப் பொருள் புருஷார்த்தமும், பொருளினை யீட்டுவார்க்கு இன்பம் புருஷார்த்தமும், இன்பநலந்துய்ப்பார்க்கு வீடு புருஷார்த்தமுமாக அறிந்தேன். வீட்டின்மேலிட்டதொன்றுமின்றாகலின், அதுவே பரமபுருஷார்த்தமென்று தெளிந்தேன்.

ஆ. குழந்தாய், உனதுதெளிவு அதிக நன்றாயிருக்கின்றது.

மா. இன்னுமொன்று சொல்லுகிறேன், கேட்டருளல்வேண்டும்.

ஆ. நீ சொல்வதெல்லாம் எமக்கு இன்பத்தையே தரலால் யாமொன்றுந் தடுப்பதில்லை. தோன்றியதைச் சொல்லலாம்.

மா. கல்வியானது அறமுதலிய நான்கினையும் பயக்கும் என்று நூல்கள் கூறினும், முதன் மூன்றினைக் கழித்து அஃது வீடொன்றினைப் பயக்குமென்று துணிவதே உசிதமென்று தோன்றுகின்றது. இது தேவரீரது திருவுள்ளத்துக்கு இசைவுதானோ?

ஆ. உன்னுடைய தெளிந்த புத்திக்கு யாம் அதிக சந்தோஷமடைந்தோம். "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவனற்றொழாஅரெனின்" என்று தமிழ்வேதங் கூறுகையால், நின்மலனாகிய கடவுளை வழிபடுதலொன்றே கல்விகற்பதனாலாய பயனென்று நீ கொண்டதுணிவு வெறுக்கத்தக்கதாகாது.

மா. திருவள்ளுவதேவர் கடவுளை வழிபட வேண்டியது என்று உணர்த்துங்கால் "வாலறிவன்" என்று கூறினர். மெய்யறிவினை யுடையவன் என்பது அதற்குப் பொருள். உலகில் கடவு

ளுண்டென்று கூறுஞ் சமயிகள் அக்கடவுளிலக்கணம் ஒருவர் கூறியதுபோ லொருவர்கூறார். ஈண்டுப்போந்த "வாலறிவன்" என்பதை யெச்சமயத்து முடிவாகக்கொள்வது? விளங்க வுரைத்தருளல்வேண்டும்.

(திருக்குறள் சைவசித்தாந்தமெனல்.)

ஆ. திருவள்ளுவதேவர் செய்தருளிய திருக்குறள் பொதுவகையால் எல்லாச் சமயிகளுக்கும் உபகாரமாயினும், சிறப்புவகையால் அது சைவசித்தாந்திகட்கே உரியது.

மா. அதனை அடியேனுக்கு உணர்த்துதல் வேண்டும்.

ஆ. "தேவர்குறளுந் திருநான் மறைமுடிவும், மூவர்தமிழும் முனிமொழியும் - கோவைத், திருவாசகமுந் திருமூலர் சொல்லும், ஒருவாசகமென் றுணர்" என்று உலகன்னையாகிய ஔவையார் அருளிச்செய்தனர். திருக்குறளும், உபநிடதங்களும், தேவாரமும், வியாசசூத்திரமும், திருக்கோவை - திருவாசகங்களும், திருமந்திரமுந் தம்முள் மாறுபடாத (ஒருவகைப்பட்ட) வாசகம் என்று ஏற்பட்டபின்னர், திருக்குறளைச் சைவசித்தாந்த நூலென்னாது வேறு யாதென்னலாம்? இந்த முடிவு கூறிய ஔவையாரும், திருவள்ளுவருஞ் சகோதரர்கள். திருக்குறள் முதலிய நூல்களை யொருவாசகமென்று சித்தாந்தப்படுத்திய ஔவையாரது நூலும் அவ்வொருவாசகத்திலேயே அடங்கும். இவ்வுண்மை தெளிந்திடுவார்க்கு "வாலறிவனற்றாள்" என்று திருவள்ளுவர் கூறியதும், "பரனைநினைந்து" என்று ஔவையார் கூறியதும் ஸ்ரீ சிவபரஞ்சுடரைத் தெரிவித்தன வென்றே விளங்கும்.

மா. ஔவையாரது சாட்சி பிரபல சாட்சிதான். இதை அங்கீகரித்துக்கொண்டேன். "வாலறிவன்" என்னுஞ் சொல்லின்மேல் விசாரணைசெய்து அதனைச் சைவவாசகமாகக் காட்டி நாட்டுதல்வேண்டும். அப்படியே ஔவையார் கூறிய "பரன்" என்னுஞ் சொல்லையுஞ் சைவ வாசகமாகக் காட்டி நாட்டுதல் வேண்டும்.

ஆ. வாலறிவன் என்பது மெய்யறிவினன் என்னும் பொருளைத் தருதலால், அதனை முன்னர்விளக்கிப் பின்பு அது சைவவாசகமாதலைத் தெரிவிக்கின்றோம்.

மா. எனது பாக்யம், அப்படியே செய்தருளலாம்.

ஆ. மெய் என்னும் அடைகொடுத்து அறிவு என்னும் பிரயோகஞ் செய்தமையால், பொய்யறி வொன்றுண்டென்பது ஏற்படுகின்றது. மெய்யறிவினை யுடையவன் மெய்யறிவனாகிறபடிப் பொய்யறிவினை யுடையவன் பொய்யறிவன் என்று சொல்லப்படுவான். இதனால், மெய்யறிவினனே கடவுளெனவும், பொய்யறிவினன் கடவுளுக்கு வேறானவனெனவுந் தெளியவேண்டியது.

மா. இதனை யின்னுங் கொஞ்சம் விளங்க வுரைத்தருளல் வேண்டும்.

ஆ. மெய்யறிவன் எப்போது மொருபடித்தாய் அறிவுக்கு மலினம் வரப்பெறாமல் விளங்குவான். பொய்யறிவன் அறிவுகலங்கிக் காலவேறுபாட்டால் அறியாமை துக்கங்களோடு வருந்தி யுழலுவான்.

மா. பொய்யறிவன் என்பவன் யாவன்? இந்தப் பொய்யறிவனுக்கும், மேற்கூறிய மெய்யறிவனுக்குமுள்ள சம்பந்தம்யாது?

ஆ. புல், பூடு, புழு, மரம், மிருகம், பறவை, பாம்பு, கல், மனிதர், பேய், கணங்கள், அசுரர், முனிவர், தேவர் முதலிய பிறவிகளிலுழலுஞ் சீவனே பொய்யறிவன். இந்தப் பொய்யறிவன் அடிமையும், மெய்யறிவன் தலைவனுமாயிடுதலே இருவர்க்குமுள்ள சம்பந்தம்.

மா. தேவரீரது உபதேசத்தால் கடவுளும், சீவனும் அறிவுடையவராக ஏற்படுகின்றனர். இவ்விரண் டறிவுகளும் அநாதியேயுண்டா? அல்லது ஒரு அறிவில் மற்றோரறிவு உண்டாயிற்று?

ஆ. இரண்டறிவுகளும் அநாதியென்பதுதான் வேதத்தின்றுணிவு. ஒரு அறிவில் மற்றோரறிவு உண்டாயிற்றென்பது கூடாது.

மா. இதனை விளக்கியருளுதல் வேண்டும்.

ஆ. "வாலறிவன்" என்று கூறப்பட்ட கடவுளாகிய அறிவில் சீவ அறிவு தோன்றியதாயின், இரண்டறிவுகளுக்குந் தன்மையொன்றாயிருத்தல் வேண்டும். அங்ஙனமின்மையின், இரண்டறிவுகளையுங் காரணகாரியங்களென்றிடல் கூடாது.

மா. இரண்டறிவுகளுக்குந் தன்மைவேறுபட்டிருப்பதெனல் யாது?

ஆ. ஒன்று மெய்யறிவும், மற்றொன்று பொய்யறிவுமாயிடுதலே அவ்விரண்டறிவுகளிடத்து முள்ள வேறுபாடு. மெய்யறிவுக்குப் பரிசுத்தமுடைமையும், அதனால் அது ஜநநமரணப்பட்டு வருந்தாமையும், பொய்யறிவுக்குப் பரிசுத்த மின்மையும், அதனால் அது ஜனனமரணப்பட்டு வருந்துதலுங் கேட்கப்படுவதை முன்னரே யாம் விளக்கியிருக்கின்றோம். ஆகையால், இரண்டறிவுகளு மொன்றாகமாட்டா.

மா. "வாலறிவன்" என்னும் பிரயோகத்தினுண்மையை அறிந்துகொண்டேன். அபரிசுத்த அறிவாகிய பொய்யறிவினனென்னும் பெயருடைய சீவனைப் பரமெனமயங்கிக் கெடுவாரை மறுத்தற்பொருட்டே "வாலறிவன்" என்று தமிழ்வேதஞ் சாதித்த பெருமையையுந் தெளிந்துகொண்டேன். யான் தெளிந்தது தேவரீரது திருவுள்ளத்திற் கிசைவுதானோ?

(புறச்சமய தூஷணம்.)

ஆ. எமக்கு அதிக சந்தோஷம். உலகாயதமுதல் பாஞ்சராத்திரமீறாயுள்ள பலசமயங்கள் உலகத்திலிருக்கின்றன. இச்சமயங்கள் முறையே பூதங்களையும், பொறிகளையும், புலன்களையும், பிராணாதிகளையும், அந்தக்கரணங்களையும், சீவனையுங் கடவுளர்களாகப் போதிக்கும். இவையாவும் அபரிசுத்த பதார்த்தங்கள். இவற்றை மெய்ப்பொருள்களெனக் கோடல் துன்பத்தையே விளைக்கும். இத்துன்பத்தை நிவிர்த்தித்தற்பொருட்டே "வாலறிவன்" என்று பரம்பொருளின துண்மையைக் காட்டித் தமிழ்வேதம் உபகரித்தது.

மா. தேவரீரதுபோதம் உசிதமாகத் தோன்றினும், இதில் ஒரு சந்தேகம் தோன்றுகிறது. கேட்டருளல் வேண்டும்.

ஆ. நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம், தோன்றியதைச் சொல்லலாம்.

மா. தேவரீர் அபரிசுத்தங்களென வொதுக்கிய பூதமுதல் சீவனிறுதியாயுள்ள பொருள்களை அவ்வப்பொருள்களை வழிபடுஞ் சமயிகள் பரிசுத்தங்களெனச் சாதித்து அவைகளை "வாலறிவன்" என்பதற்கு விஷயமாக்குவாராயின், அதற்குமேல் செய்யத்தக்கது யாது?

ஆ, அது முடியாதகாரியம். ஏனெனின், ஒருவன் ஒன்றும் இரண்டும் மூன்று எனவும், மற்றொருவன் ஒன்றும் இரண்டும் நான்கு எனவும், வேறொருவன் ஒன்றும் இரண்டும் ஐந்து எனவுஞ் சொல்வதாக வொப்புவோம். ஒன்றும் இரண்டும் மூன்று என்று சொல்பவனைப்போலவே நான்கு-ஐந்து என்று சொல்பவர்களும் விவேகிகளாவார்களோ? இவருள், ஒருவன் கூறியது மாத்திரமே மெய்யாகி, ஏனையோர் கூறியவை பொய்யாயிடுதல்போலச் சைவசித்தாந்த முடிவொன்றே சத்தியமும், ஏனைய சமயமுடிவுகள் அசத்தியமுமாயிடுதலைத் தெளிந்தின்புறக்கடவாய்.

மா. இனி நான் செய்யத்தக்கது யாது?

ஆ, வேதத்தில் "ஈசானஸ்ஸர்வவித்யாநாம்" என்று கூறப்பட்டிருக்கின்றது. சர்வவித்யாஸ்வரூபன் ஈசானன் என்று வேதங் கூறினமையால், கற்றதனாலறிந்தடையத்தக்கது அக்கல்வியின் வடிவமாகிய ஈசானமூர்த்தியினது கழன்மலரென்றே நிச்சயமாயிற்று. கற்றவர்கள் சிவனையே அடைவார்களென்பதைக் "கற்றவர்களுண்ணுங் கனியேபோற்றி" என்று ஸ்ரீமத் அப்பர் சுவாமிகளுந் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றனர். இவ்வுண்மையைச் சிந்தித்து, ஸ்ரீ சிவபெருமானது திருவடிகளிலன்பு பூண்டு, சிவபக்தியில்லாத சிதடருறவொழிந்து சுகிப்பாயாக.

மா. சிவபக்தியும், அடியார் பக்தியுஞ் செய்துகொண்டிருப்பவர்கள் புறச்சமயிகளை நேசித்தல் குற்றமோ?

ஆ. புறச்சமயங்களைப் போதித்துக்கொண்டு சிவநிந்தையிலிறங்கிச் சீரழியும் பாவிகளுறவு தள்ளத்தக்கதுதான். "நல்லோரைக் காண்பதுவு நன்றே நலமிக்க, நல்லோர்சொற் கேட்பதுவு நன்றே - நல்லோர், குணங்களுரைப்பதுவு நன்றே யவரோ - டிணங்கி யிருப்பதுவு நன்று" என்று கூறிய ஔவையார் "தீயோரைக் காண்பதுவுந் தீதேதிருவற்ற - தீயோர்சொற் கேட்பதுவுந் தீதே - தீயோர் - குணங்களுரைப்பதுவுந் தீதே யவரோ - டிணங்கியிருப்பதுவுந்தீது" எனவுங்கூறி, அஸாது சங்கத்தைத் திரஸ்கரித்திருக்கின்றனர். ஆகையால், நீ சிவனடியார்களுக்கு ஏவல் புரிந்து அவர்பால் சிவன் புகழைக்

கேட்டு உய்யும்வழி தேடுவாயாக. சிவநிந்தை செய்தொழுகுந் தீயோரினத்தைச் சேராதொதுங்கி வாழ்வாயாக.

மா. எனது தேசிகவள்ளலே! தேவரீர் காட்டிய ஔவையினது வசனங்கள் "தீயோர்" இனஞ் சேர்தல் கூடாதென்று தெரிவித்தனவே யன்றி அன்னிய சமயிகளோடு மருவுதல் கூடாது என்று தெரிவித்திலவே. அப்படி யாதேனும் வசனங்களுளவேல் எடுத்துக்காட்டி என்னைச் சந்தோஷப்படுத்த வேண்டுகின்றேன்.

ஆ. குழந்தாய்! சிவத்துரோகத்தினுமிக்க தீமையுண்டோ? அச் சிவத்துரோகிகளே தீயோர் என்று ஒதுக்கத் தக்கவர்கள். "பசுநூல்கற்கும் - பிச்சரைக் காணுகண் வாய்பேசாதப் பேய்களோடே" என்று திருமாளிகைத் தேவர் கூறியதுணர்ந்து மகிழ்வாயாக.

மா. இன்னுமொரு பிரமாணங்காட்ட வேண்டுகின்றேன்.

ஆ. உனது அன்புக்கு அளவில்லை. நீ விரும்பிக் கேட்டமையால் அப்படியே சொல்லுகின்றோம். சித்தாந்த சாத்திரம் பதினான்கனுளொன்றாகிய "நெஞ்சுவிடுதூது" என்னும் பிரபந்தத்தில்,

"பூசிமுடித் துண்டுடுத்துப் பூங்குழலார் தங்கலவி
யாசைதனிற் பட்டின்ப வார்கலிக்குள் - நேசமுற
நின்று திளைக்குமிது முத்தி யல்லதுவே
றொன்றுந் திளைக்குமது முத்தி - யன்றென்
றிலகாவிரு ளலகை போலிகலே பேசு
முலகா யதன்பா லுறாதே - பலகாலுந்
தாம்பிரமங் கண்டவர்போற் றம்மைக்கண் டாங்கதுவே
நான்பிரம மென்பவர்பா னண்ணுதே - யூன்றனக்குக்
கொன்றிடுவ தெல்லாங் கொலையல்ல வென்றுகுறித்
தென்றுமற மேதெய்வ மென்றென்று - வென்றிப்
பொறையே யெனும்புத்தன் பொல்லாத புன்சொன்
மிறையே விரும்பி விழாதே - நிறைமேவி
வாழ்பவர்போன் மன்னுடலின் மன்னுமுயிரா மம்பறித்துத்
தாழ்வுநினை யாது துகி ருனகற்றி - யாழ்விக்கு

மஞ்சு மகற்று மதுமுத்தி யென்றுரைக்கும்
வஞ்சமண்ணள் பாழி மதியாதே - செஞ்சொல்புனை
யாதிமறை;யோதி யதன்பயனென் றம்மறியா
வேதியர்சொன்।மெய்யென்று மேவாதே - யாதியின்மே
லுற்றதிரு நீறுஞ் சிவாலயமு முள்ளத்துச்
செற்ற புலையர்பாற் செல்லாதே - நற்றவஞ்சேர்
வேடமுடன் பூசையருண் மெய்ஞ்ஞான மில்லாத
மூடருடன் கூடி முயங்காதே - நீட
வழித்துப் பிறப்ப தறியா தரனைப்
பழித்துத் திரிபவரைப் பாராதே"

என்று ஸ்ரீமத் உமாபதிசிவம் கட்டளையிட்டிருக்கின்றது. இத்தகைய வசனங்களின்னும் பலவுள. ஆகையால், நீ அதிக திருப்தியுடன் (சிவத்துரோகிகளே தீயோரெனத்) தெளிந்து அவரது நட்பு நஞ்சினுங் கொடியதென்றொதுங்கி இன்புறுவாயாக. உனக்குச் சிவப்பிரஸாதமுண்டாகுக.

(இன்னும் வரும்)

பசுக்காத்தல்.

(ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் பாலபாடம்.)

பசுக்கள் நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை, என ஐந்து வகைப்படும். அவைகளுள், நந்தை கபிலநிறமும், பத்திரை கருநிறமும், சுரபி வெண்ணிறமும், சுசீலை புகைநிறமும், சுமனை செந்நிறமும் உடையனவாம். பசுக்கள் இம்மை மறுமை இரண்டினும் பயனைத் தரும். பசுக்களுக்குச் சாலையை விதிப்படி செய்வித்து, ஆற்றுமண் ஓடைமண் புற்றுமண் வில்வத்தடிமண் அரசடிமண் என்பவைகளால் நிலம்படுத்தல் வேண்டும். முதிர்கன்று இளங்கன்று நோயுற்றகன்று என்னும் இவைகளுக்கு இடங்கள் வெவ்வேறாக அமைத்தல் வேண்டும், நாடோறும் கோசல கோமயங்களைப் புறத்தே நீக்கிச் சுத்திசெய்தல்வேண்டும், கொசுகு வராமல் தூபம் இடல்வேண்டும், தீபங்கள் ஏற்றல்வேண்டும்.

பசுக்களை இயக்குமிடத்து, சிறிதும் வருத்தஞ் செய்யாமல், இரக்கத்தோடும் பலாசங் கோலினாலே மெல்ல ஓங்கி, போ போ

என்று இயக்கல்வேண்டும். இரக்கமின்றிக் கோபித்து அதட்டி அடிப்பவர் நரகத்தில் வீழ்வர். பசுக்களை சாலையினுள்ளே சுவத்தி என்னுஞ் சொல்லைச் சொல்லி, மெல்ல மெல்லப் புகுவித்து, சிரத்தையோடும் புல்லைக்கொடுத்தல்வேண்டும். நோயுற்ற பசுக்களுக்கு வேறிடம் அமைத்து, மருந்து கொடுத்துப் பேணல்வேண்டும். அட்டமிதோறும் பசுக்களை நீராட்டி, பூச்சூட்டி, அன்னமும் சலமும் ஊட்டி, தூபதீபங்காட்டி, வணங்கல்வேண்டும். பசுக்களை வேனிற்காலத்திலே சோலைகளிலும், மழைக்காலத்திலே மலைச்சாரல் வனங்களிலும், பனிக்காலத்திலே வெய்யில் மிகுந்த வெளிகளிலும், இடர் உறுவண்ணம் மேய்த்தல் வேண்டும்.

பசுக்களை வலஞ்செய்து வணங்கித் துதித்துப் புல்லுக்கொடுத்தலும், ஆவுரிஞ்சுகல் நாட்டுதலும், கடவுளுக்கும் ஆசாரியருக்கும் பசுவைத் தானஞ்செய்தலும், குற்றமற்ற இலக்கணங்களையுடைய இடபத்தைக் கடவுள் சந்நிதிக்குத் தானஞ்செய்தலும், தேவாலயத் திருப்பணியின்பொருட்டுச் சகடத்திற்கு எருது கொடுத்தலும், இளைத்த பசுவைக் கண்டு இரங்கித் தாம் வாங்கி வளர்த்தலும் பெரும் புண்ணியங்களாம்.

பசுக்கள் தரும் பால் தயிர் நெய் கோசலம் கோமயம் என்னும் பஞ்சகவ்வியங்களையும் கடவுளுக்கு அபிஷேகம் பண்ணுவித்தல் வேண்டும். பாலை இரண்டுமாசம் செல்லும்வரையும் கன்று பருகும்படிவிட்டு, பின் கறந்து கடவுளுக்கு அபிஷேகம் பண்ணுவித்தல் வேண்டும். கன்று பாலுண்டு முலையை விடுத்தபோது, சலத்தினாலே முலையைக் கழுவிக் கறத்தல்வேண்டும். ஆசை மிகுதியினாலே கன்றுக்குப் பால்விடாது கறந்தவர் நரகத்தில் வீழ்ந்து நெடுங்காலம் வருந்தி, பின்பு பூமியிலே பிறந்து கடும்பசியினாலே வீடுகடோறும் இரப்பர். கபிலையின் பாலைக் கடவுளுக்கே கொடுக்க; அதனைத் தாம் பருகில் நரகத்து வீழ்வர். புலையர்கள் பசுக்களின் சாலையிலே புகுந்தார்களாயின், எண்ணில்லாத காலம் எரிவாய் நரகத்து வீழ்ந்து வருந்துவார்கள்; அவர்களுக்குப் பரிகாரமில்லை. பசுக்களை இடர் நீங்கக் காக்காதவர்களும், மலட்டுப் பசுவின்மேலேனும் இடபத்தின் மேலேனும் பாரம் ஏற்றினவர்களும், இடபத்தில் ஏறினவர்களும் நரகத்தில் வீழ்வார்கள்.